Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

C.C. No: 207 of 2024

DATE : 03.06.2025

Depositions of witness for Prosecution

PW : 1

| Name | பழனிச்சாமி | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of June 2025

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

1) நான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த போது கடந்த 23.04.2020ம் தேதி காலை 8 மணியை போல் ஆய்வாளர் பானுமதி மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் சுப்புராஜ் மற்றும் தலைமை காவலர் ரேணுகாந்த் மற்றும் தலைமை காவலர் பூபதிராஜ் ஆகியோர்கள் மது விலக்கு சம்மந்தமாக மதுவிலக்கு பரிசோதனை சாதனங்கள் மற்றும் தலவாடங்களுடன் ரோந்து பணிக்கு சென்றோம். அப்போது ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவல்களின் படி கூமாப்பட்டியை சேர்ந்த முருகன், சசிக்குமார், காளிராஜ், தமிழரசன் ஆகியோர்கள் சட்ட விரோதமாக சாராயம் காய்ச்ச ஊறல்போட்டுள்ளார்கள் என்ற தகவலின் பேரில் கவுண்டம்பட்டிக்கு மேற்கேயுள்ள ஓடைக்கு சென்றோம். அப்போது அங்கு நான்கு பேர் பேசிக்கொண்டிருந்தார்கள். போலீஸ் பார்டிகளாகிய எங்களை பார்த்ததும் அங்கிருந்து ஓடமுற்பட்டவர்களை நாங்கள் அவர்கள் பின்னாலேயே துரத்திசென்றோம். அவர்கள் வடக்கு பக்கமாக ஓடினார்கள் அதில் பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட முருகன் என்பவர் மட்டும் பிடிப்பட்டார். மற்ற மூன்று நபர்களும் ஓடி தலைமறைவாகிவிட்டார்கள். முருகனிடம் நடந்த சம்பவம் பற்றி கேட்க அவர் முன்னுக்கு பின் முரணாக சொன்னார். பின்பு தொடர்ந்து நடந்த விசாரணையில் நாங்கள் நான்கு பேரும் சேர்ந்து சாராயம் காய்ச்சுவதற்காக அருகில் உள்ள தோட்டத்தின் கிணற்றிக்கு கீழ் பக்கமாக சுமார் 20 லிட்டர் பிடிக்கக்கூடிய மண்பானைகளில் ஊறல் போட்டுள்ளோம் என்று கூறி அந்த இடத்திற்கு அழைத்து சென்றார். அப்போது அந்த இடத்தில் மண்ணுக்கு அடியில்

புதைக்கப்பட்ட 6 மண்பானைகளும் அருகில் 5 லிட்டர் வெள்ளைநிற பிளாஸ்டிக் கேன் பாதியளவு காய்ச்சி வடிக்கப்பட்ட சாராயமும், ஒரு பெரிய அலுமினிய பானையும், ஒரு அலுமினிய குண்டாவும் அதன் அருகிலேயே TN 67 AV 9861 என்ற எண் கொண்ட மஞ்சள் நிற ஆட்டோவும் இருந்தது நாங்கள் அது பற்றி விசாரிக்க அந்த ஆட்டோ என்னுடன் உள்ள சசிக்குமார் என்பவருடையது. இதை சாராயம் காய்ச்சி கொண்டு சென்று விற்பதற்காக பயன்படுத்தினோம் என்றும் அலுமினிய பானையையும், அலுமினிய குண்டாவையும் சாராயம் காய்ச்சுவதற்காக பயன்படுத்துகிறோம் என்று ஒப்புக்கொண்டார். பின்பு ரசாயன பகுப்பாய்விற்காக பானையில் ஊறல் போட்டிருந்த ஊறலில் இருந்து சுமார் 750 ML பிடிக்கக்கூடிய இரண்டு பிளாஸ்டிக் பாட்டில்களில் 500 ML அளவு எடுத்துக்கொண்டும் காய்ச்சி வடித்த வெள்ளை நிற பிளாஸ்டிக் கேனில் இருந்த சாராயத்தில் இருந்த 750 ML பிடிக்கக்கூடிய இரண்டு பிளாஸ்டிக் பாட்டில்களில் 500 ML எடுத்துக்கொண்டும் அவற்றை நாங்கள் முகர்ந்து பார்த்த போது கண்களில் எறிச்சலுட்டும் மற்றும் குமட்டக்கூடிய நெடி வந்தது. இதை பற்றி முருகனிடம் கேட்க அவர் சாராயம் குடிக்கும் நபர்களுக்கு அதிக போதை ஏற்படுவதற்காக இதில் விசத்தன்மையுள்ள பொருட்களை கலந்துள்ளோம் என்று ஒப்புக்கொண்டார். பின்பு அவற்றை அந்த இடத்திலேயே அழித்துவிட்டோம். முருகன் சுமார் 9 மணியை போல எவ்வித அச்சுறுத்தலோ பயமோயின்றி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 3 வது கையெழுத்து என்னுடையது தான். **ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அங்கேயே அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியின் பேரில் அலுமினிய பானை ஒன்று, அலுமினிய குண்டா ஒன்று, பகுப்பாய்விற்கு அனுப்பக்கூடிய 750 ML பிடிக்கக்கூடிய நான்கு பாட்டில்களில் 2 பாட்டிகள் ஊறல் மற்றும் 2 பாட்டிகளில் வடிகட்டிய சாராயம் மற்றும் TN 67 AV 9861 என்ற எண் கொண்ட ஆட்டோ ஆகியவற்றை கைப்பற்றி சுமார் 11 மணியை போல நிலையம் வந்தோம். அத்தாட்சியிலும் நான் கையொப்பம் செய்தேன் என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 3 வது கையெழுத்து என்னுடையது தான். **அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) ஆஜர் எதிரிகள் நான்கு பேர்களை குறிப்பிட்டு தான் கள்ளச்சாராயம் ஊறல் போட்டிருப்பதாக ஆய்வாளருக்கு ரகசிய தகவல் கிடைத்ததா என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளை ஓடைக்குள் வைத்து தான் பார்த்தோம். எனது முதல்விசாரணையில் ஓடைக்குள் நான்கு நபர்கள் பேசிக்கொண்டிருந்ததாக சொல்லியுள்ள நிலையில் அந்த நான்கு நபர்கள் தான் ஆஜர் எதிரிகள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரி அழைத்து சென்று கிணற்றின் அருகே இருந்து எடுத்துக்கொடுத்த கள்ளச்சாராய ஊறல்கள் போடப்பட்டிருந்த தோப்பு யாருடையது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தோட்டத்தின் உரிமையாளர் யார் என்பதை தெரிந்து கொள்ள ஆய்வாளர் விசாரணை எதுவும் மேற்கொண்டாரா என்றால் விசாரணை மேற்கொண்டிருப்பார். கள்ளச்சாராயம் ஊறல் போடப்பட்டிருந்த மண்பாண்டங்களை உடையாமல் தான் பூமிக்கு அடியில் இருந்து எடுத்தோம்.

பொதுவாக ரோந்து பணிக்கு செல்லும் போது பொது நாட்குறிப்பில் குறிப்பிடுவது வழக்கம் என்று சொன்னால் சரிதான். பொது நாட்குறிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. ஆட்டோவை 2 எதிரி சசிக்குமார் வீட்டில் இருந்து தான் கைப்பற்றப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சம்பவ சமயத்தில் ஓடைக்கு அருகே தனி நபர்கள் யாரும் இல்லை. ஒப்புதல் வாக்குமூலம் சம்பவ இடத்தில் வைத்து தான் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலம் கணினியில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் சோதனைக்கு செல்லும் போது கையில் மடிக்கணினியையும் எடுத்து சென்றோம் என்றால் சரிதான். அதனுடன் அச்சுப்பொறியையும் எடுத்து சென்றோம் என்றால் ஆய்வாளர் வைத்திருந்தார். ஆஜர் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்து குற்ற எண் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். பொதுவாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பின்னிட்டு தான் குற்ற எண் வழங்குவது வழக்கம் என்று சொன்னால் சரிதான். ஆய்வாளருக்கு குற்ற எண் குறித்த வரிசை விபரங்கள் தெரியும் என்ற காரணத்தினால் அத்தாட்சியில் குற்ற எண் கொடுத்தோம். நான் சொல்வது போல ஆஜர் எதிரிகள் எந்த ஊறலும் போடவில்லை என்றும் அவ்வாறு நான் சொல்வது போல் தோட்டத்தில் வைத்து அத்தாட்சியில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டிருந்தால் மேற்படி தோட்டத்தின் உரிமையாளர் யார் என்ற விபரம் எனக்கு தெரிய வந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றும் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு